# ஜனாதிபதி - ஆயர் கெனனைச் சந்தித்து பேச்சு

(கொழும்பு)
ஜனாதிபதி டி. பி. விஜே துங்கா நேற்று முன்தினம் அங்கிலிக்கன் ஆயர் கெனனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். கொழும்பு ஆயர் இல்லத்
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 18 இதழ் 137
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 02 — 07 — 1993

## கேரதீவு இறங்கு துறைக்கு ஐ. நா. அதிகாரிகள் விஜயம்

(யாழ்ப்பாணம்)
அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி ஹாசிம் உளர்க்சன், பாதுகாப்பு அதிகாரி பீற்றர் நிக்கிலஸ் ஆகியோர் விடுதலைப் புலிகளின் பூரண பாதுகாப்புடன் நேற்றுக்காலை கேரதீவு இறங்குதுறையை
(4-ம் பக்கம் பார்க்க)

## இந். வெளியுறவு அமைச்சர் இலங்கை விஜயம்

(புதுடில்லி)
இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ் சிங் அடுத்த மாத மளவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.
இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துமுகமாகவே இவர்
(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப இந்தியா முடிவு

## முதல் கப்பல் ஆகஸ்ட்டில் வருகிறது!

(சென்னை)
தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப இந்திய அரசு முடிவு செய்துள்ளது. அகதிகளை ஏற்றிவரும் முதல் கப்பல் அடுத்த மாதம் 15-ந் திகதி தமிழகத்திலிருந்து புறப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பும் பணி அடுத்த மாதம் 15ம் திகதி முதல் ஆரம்பமாகுமென தமிழக வருவாய் துறை நிர்வாக ஆணையர் ரி. என். ராமதாஸ் தெரிவித்துள்ளார். திருச்சியில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றிய அவர் இதனைத்
(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ உயர் பீடத்தில் மாற்றம்

(கொழும்பு)
இராணுவ உயர்பீடத்தில் அண்மையில் ஏற்படுத்தப் பட்ட மாற்றங்கள் காரணமாக வடக்கு—கிழக்கின் இராணுவ உயர்பீடத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.
இதன்படி பொலநறுவை பிறிகேட் தளபதியாக கேர்
4-ம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஸ்தாபனங்கள் தமிழக ஆளுநரிடம் கோரிக்கை

(லண்டன்)
தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உதவிகள் வழங்குவதை தொண்டர் ஸ்தாபனங்கள் நிறுத்திக் கொள்ளவேண்டுமென்று தமிழகஅரசு விதித்த தடையை மீளப்பரிசீலனை செய்யுமாறு சம்பந்தப்பட்ட தொண்டர் ஸ்தாபனங்கள் தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டியிடமும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவிடமும் கோரிக்கை விடுத்துள்ளன.

தமிழ்நாடு அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு தாம் முன்னர் வழங்கிவந்த நிவாரணப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தமக்கு மீண்டும் அனுமதி அளிக்கும்படி இந்த தொண்டர் ஸ்தாபனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

பிரிட்டன், சுவிஸ்லாந்து இத்தாலி, அயர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த தொண்டர் ஸ்தாபனங்கள் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு கல்வி மற்றும் ஊட்டச்சத்து சார்ந்த உதவிகளை முக்கியமாகச்செய்து வந்தது குறிப்பிடத்தக்கது.
(வி)

## தரம் குறைந்த அரிசி கிழக்கில் விநியோகம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பில் உணவுமுத்திரைக்கு தரம் குறைந்த அரிசி வழங்கப்படுவதாக இப் பகுதி மக்கள் புகார் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பில் தரமான அரிசி 16 ரூபாவுக்கு விற்கப்பட்டு வருவதாகவும் ஆனல் உணவுமுத்திரைக்கு இந்த அரிசி 21 ரூபாவிற்கு வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது!

இதுகுறித்து அரச அதிகாரிகளுக்கு எடுத்து கூறியும் எதி
(4-ம் பக்கம் பார்க்க)

## கம்யூனிஸ்ட் கட்சி 50 வருட பூர்த்தி

(கொழும்பு)
இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி அதன் ஐம்பதாவது ஆண்டு நிறைவை இன்று வெள்ளிக் கிழமை கொண்டாடுகிறது.
கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இன்று ஒருபொதுக் கூட்டம் நடத்தினுல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது (இ)

## அரசசார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதிகளை ஐ. நா. அதிகாரிகள் இன்றுசந்திப்பு

(திருநெல்வேலி)
அகதிகளுக்கான ஐ. நா. அதிகாரிகள் இன்று வெள்ளிக் கிழமை காலை அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தில் சந்தித்து பேச உள்ளனர்.

இச்சந்திப்பில் ஐ. நா.வுக்கான இலங்கைப் பிரதிநிதி கசிம் ஊர்கான் இரண்டாவது பிரதிநிதி பீற்றர் நிக்கலஸ் யாழ். வதிவிடப் பிரதிநிதி அசோக்குமார் ஆகியோர் கலந்துகொள்வர். (157)

## அரசியல் தஞ்சம் கோரி தரை வழியாக வருவோரை ஜேர்மனி திருப்பி அனுப்பும்

(பொன்)
ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பிப்பவர்களுக்கான புதியசட்டம் நேற்று முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

நேற்றிலிருந்து ஜேர்மனிக்குள் சட்டவிரோதமாக தரை மார்க்கமாகப் பிரவேசித்து அரசியல் தஞ்சம் கோரும் அனைவரையும் உடனடியாக அவர்களது சொந்த நாடுகளுக்கு விமானமூலம் திருப்பி அனுப்ப முடிவுசெய்யப்பட்டுள்ளதாக ஜேர்மன் அதிகாரிகள் தெரிவித்தனர். விமான மூலம் வருவோர் விமானநிலையத்தில் விசாரிக்கப்பட்டபின் அவர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்குவதா இல்லையா என்பது குறித்து முடிவுசெய்யப் படும்.

இப்புதிய சட்டத்தினுல் வருங்காலத்தில் ஜேர்மனிக்குள் அரசியல் தஞ்சம் கோரும் வெளிநாட்டவர்களின் எண்
4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா விமானத்தள விஸ்தரிப்புவேலைகள் ஆரம்பம் தமிழர் உடன் வெளியேற்றம்!

(வவுனியா)
வவுனியாவில் விமானத் தளம் விஸ்தரிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதினுல் இத்தளத்தை சுற்றியிருந்த தமிழ் மக்களை அவ்விடத்திலிருந்து உடன் வெளியேறுமாறு இராணுவத்தினர் நெருக்கடி கொடுத்து வருவதாகக் கூறப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள கோவில்குளம், தச்சன் குளம் ஆகிய பகுதிகளில் குடியிருக்கும் தமிழ் மக்களை விமான நிலைய விஸ்தரிப்புக்காக அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு இராணுவம்
(4-ம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசியப்பொருள்களை களஞ்சியப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)
யாழ். மாவட்டத்துக்கு ஒரு மாதத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது 5270 மெற்றிக் தொன் அரிசி, 4200 மெற்றிக் தொன் மா, 910 மெற்றிக் தொன் சீனி, 3 லட்சத்து 18 ஆயிரத்து 600 பைக்கற் பாம்மா வகைகள் உள்ளதாக
(4-ம்பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சுமதிதர் நோவு எண்ணெ கிடைக்கு மிடம் எஸ். கே. மெடிக்கல்ஸ், 480, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி-251)

### விற்பனைக்கு

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் சுரேகா புத்தகசாலை ஐ, 25, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (ஏ-3206)

### பயிற்சி வினாத்தாள்

(ஆண்டு 4, 5)

புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுவரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் பரீட்சை வினாத்தாள் (தமிழ், கணிதம், ஆங்கிலம் 04-07-93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். பதிவுசெய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-270)

— பெயர் மாற்றம் —

யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் *G.V. Kanesalinkam* என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்

*G.V. Kanesalinkam,*
298, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

(கி 252)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய இரதோற்சவம் இன்று நடைபெறவுள்ளதுடன் நாளை சனிக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் தொண்டைமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை 3 மணியளவில் செல்வி ந. ஜெயதாரிணி, சி. தேவகி, ந. ஜெயபாரதி ஆகியோரின் இசைக் கச்சேரி இடம்பெறும். இன்றைய விழாவுக்கு இசைமணி கி. துரைராசா தலைமை வகிப்பார். (ம)

(யாழ்ப்பாணம்)

வண்ணை - மேற்கு ஐயனார் கோவிலடி ஸ்ரீ சிசுவேச விநாயகர் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். நாளை தீர்த்த உற்சவம் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் தேர்த் திருவிழா இன்று நடைபெறவுள்ளது. இம்மாதம் 4-ம் திகதி தெப்பத் திருவிழாவுடன் வருடாந்த மகோற்சவம் நிறைவுபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரி பரி. யோவான் முதலுதவிப் படைப்பிரிவு மூன்றாம் ஆண்டு நிறைவு விழா இன்று மேற்படி கல்லூரியில் நடைபெறவுள்ளது.

0 0 0

(பண்டத்தரிப்பு)

சங்கானை கூட்டத்து மனோன்மணி அம்மன் ஆலய சப்பற உற்சவ தினமான இன்று வெள்ளிக்கிழமை மாலை செல்வி மார்க்கண்டு சூரிய குமாரியின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. (72)

0 0 0

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று 2-ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. தீர்த்தத் திருநாள் நாளை சனிக்கிழமை நடைபெறும். (72)

(கொழும்புத்துறை)

அல்லாரை அறுகம்புலம் அருள்மிகு ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 24ம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

இன்று 2ம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், நாளை 3ம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறும். 154

0 0 0

(4-ம் பக்கம் பார்க்க)


### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## நல்லூர் கந்தசுவாமி கோவில் 1993ம் ஆண்டு மகோற்சவகால தற்காலிக கடைகள்

01. நல்லூர் இந்து விடுதிக்கு அருகாமையிலும்
02. பண்டாரமாளிகை வளவில் தியணைக்கும் சேவை நிலையத்திற்கு கிழக்குப் பக்கமாகவும் மேற்குப் பக்கமாகவும்.

நிலம் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 16-07-93ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் படிவக்கட்டணம் ரூபா 50-00ஐயும் மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பிணைப்பணம் ரூபா 250/- ஐயும் செலுத்துவதன் பேரில் 15-07-93ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை மாநகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களில் (இணைப் பிரதிகளில்) கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 16-07-93ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்குப்பிந்தாமல் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

இக்கேள்விகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் தாளுவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
30-06-93.

(எ-3220)



## பொது அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகரசபை

### நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவகால தற்காலிகக் கடைகள்

1993ம் ஆண்டு நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் போது தற்காலிக கடைகளை அமைக்க விரும்புவோர் பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்குமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்

1. தனியார் காணியில் தற்காலிக கடை அமைத்து வியாபாரம் செய்ய விரும்புவோர் 15-07-93க்கு முன்னர் யாழ். மாநகரசபையின் நானுவித இறைவரிக் கிளையில் உரிய படிவங்களைப் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும்.
2. அவ்வாறு தனியார் காணியில் வியாபாரம் செய்ய விண்ணப்பிப்பவர்கள் அக்காணி உரிமையாளரின் சம்மதக் கடிதத்தையும் இணைக்க வேண்டும்.
3. தற்காலிக கடை அமைப்புகளுக்கு யாழ். மாநகர சபை நிட்டமிடல் பிரிவில் உரிய விண்ணப்பம் பெற்று அனுமதி பெறுதல் வேண்டும்.

மேற்குறித்த நிபந்தனைகளை 16-07-93க்கு முன் பூர்த்திசெய்யத் தவறுபவர்கள் உற்சவ காலத்தில் தற்காலிக கடை அமைத்து வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.


முக்கிய குறிப்பு: எக்காரணம் கொண்டும் திருவிழாக்கால தற்காலிக கடைகளை தெருவோரங்களில் அமைப்பது அனுமதிக்கப்படமாட்டாது.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

1993-06-30.

(எ-3221)






## 30-06-93 சீட்டிழுப்பில் பரிசு பெற்றோர் விபரம்:

| | இல. | பெயர் | விலாசம் |
|---|---|---|---|
| 1ம் பரிசு: | 595 | செல்வி செல்வநாயகம் | 595, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |
| 2ம் பரிசு: | 943 | சி. மேரி பிளவர் | 963/7, வலம்புரம், கொழும்புத்துறை. |
| 3ம் பரிசு: | 2197 | சி. குகன் | கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. |

ஆறுதல் பரிசுகள்:

1. 1711 த. சுவேந்திரன், மீசாலை தெற்கு, மீசாலை. 2. 2166 கெ. பரமகாஸ், மாலிசந்தி, கரவெட்டி. 3. 1771 எஸ். நரேந்திரன், சாவகச்சேரி. 4. 1065 ஜெ. சங்கரன், வல்வெட்டி, வல்வெட்டித்துறை. 5. 2155 சு. தேவிகா, மாலிசந்தி, துன்னாலை தெற்கு, கரவெட்டி. 6. 1567 த. லக்ஷ்மன், இல. 9, கேசவன் வீதி, யாழ்ப்பாணம். 7. 1713 எஸ். தவச்செல்வம், மந்துவில், கொடிகாமம். 8. 2210 பி. சிவசித்தம், நா மு. ஒழுங்கை, பருத்தித்துறை. 9. 1299 Robin, அளவெட்டி. 10. 394 ரமணி, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

(ஏ-3222)

**TASTELINE INDUSTRIES (PVT) LTD**
14, SEENIAR LANE, JAFFNA.



## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி ஐயாத்துரை செல்லம்மா

மலர்வு: 01-07-1921 — உதிர்வு: 02-06-1993

எம் அன்பிற்கும், பாசத்திற்கும் பிறப்பிடமாகிய தெய்வமே! நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து மீளாத் துயில் கொண்டு ஒருமாத காலமானாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு மாறாது, மறையாது.

எம் அன்புத் தாயாரின் மரணச் சடங்குகளிலும் பங்கு பற்றியும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் பல் விதத்திலும் உதவியளித்த அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றிகள்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (02-07-93) நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் தவறாது வந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"இராணி பவனம்",
சரணவாய் மத்தி, கரவெட்டி.

(கி-271)

மணிவாக்கு

பிறர் குறை காண்பவன் அரை மனிதன்; தன் குறை காண்பவன் முழு மனிதன்

— சாக்ரடீஸ்

# கொழும்பிலுள்ள பொலிஸ்நிலையங்கள் சிறைக்கூடங்களாக மாறிவருகின்றன

## தினமும் தமிழ் இளைஞர்கள் அடைத்துவைப்பு

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலுமுள்ள பொலிஸ் நிலையங்கள் யாவும் தற்போது சிறைக்கூடங்களாக மாறி வருகின்றன.

கடந்த ஒன்றரை மாதகாலமாக தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் காரணம் எதுவுமின்றி கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களில் அடைத்து வைக்கப்படுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவை படுகொலை செய்தவர்களை தேடிக் கண்டு பிடிக்கிறோம் என்று கூறிக்கொண்டு இரண்டு வார காலத்தில் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் 8 ஆயிரத்து 301 தமிழர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 2400 பேர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறைக்கூடங்களில் அடைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இன்னும் பலர் தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

தமிழர்கள் என்றும் வயோதிபர்களும் பொலிஸ் கூண்டில் நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை இன்று கொழும்பில் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் மாளிகாவத்தை விநாயகர் கோயிலுக்குச் சென்ற 62 வயதான சாவகச்சேரியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு கொழும்பு மாஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு 100 ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டாராம்.

தமிழர்களை கைது செய்யும் விடயத்தில் பொலிஸார் தற்போது புதுமுறை ஒன்றை கையாள ஆரம்பித்துள்ளனர். அதாவது கைது செய்யப்படும் ஒருவரை ஆங்கிலத்தில் 'டிடெக்சன் ஓடர்' என்று அழைக்கப்படும் தடுப்புக்காவல் உத்தரவைப் பெற்று பொலிஸ் நிலையங்களிலேயே தடுத்து வைக்கின்றனர். இதனால் பொலிஸ் கூடுகளில் தமிழ் இளைஞர்கள் நிரம்பி வழிகின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (158 - ரி)

## நமது நோக்கு

### அவர்கள் கடமை!

அரச சபை; அரசன் வருகிறான்; பட்டாடை பளபளக்கிறது; கண்கவரும் அணிகலன்கள்; அழகிய திருமுடி. கட்டியம் கூறுகிறார்கள் காவலர்கள். கேட்டு மகிழ்ந்து சிம்மாசனத்தில் ஒய்யாரமாக அமருகிறான்.

"மந்திரி! மாதம் மும்மாரி பொழிகிறதா?" இது அவனின் முதல் கேள்வி.

"தங்கள் ஆட்சியின் மாட்சியாலும், அந்தணர் வேள்வியாலும் மாதம் மும்மாரி பொழிகிறது!" —இது மந்திரி பதில்.

"நன்று. நன்று! நங்கையரின் நடனம் ஆரம்பிக்கட்டும்!" — அரசன் கட்டளை.

இது பழைய அரசசபைக் காட்சி; நாட்டில் மழை பெய்வதைக்கூட மந்திரியைக் கேட்டுத் தெரிந்த மிகப் பழையகாலக் காட்சி!

இன்றோ நாட்டின் பிரச்சினைகள் என்ன, அவற்றிற்கான தீர்வுகள் என்ன என்பதைத் தேர்தல் அறிக்கையிற் குறிப்பிட்டு, மக்களின் வாக்கைப் பெற்று, ஆட்சி அமைக்கும் ஜனநாயகம் முதிர்ச்சி பெற்ற காலம்.

ஆனால் — இன்றும் ஆட்சியில் இருக்கும் சிலர், நாட்டில் பிரச்சினை உண்டா, அது என்ன என்று கேட்டால், பழைய அரச சபைக் காட்சி நினைவுக்கு வராதா?

அண்மையில், எமது பிரதமர் புதுடில்லியில் பத்திரிகையாளர்களைச் சந்தித்திருக்கிறார். தலைவர் பிரபாகரனைச் சில தடவைகள் சந்தித்ததாக கூறிய பத்திரிகையாளர், "அவர் நியாயமற்றவராகத் தெரியவில்லையே!" என்று கூறியிருக்கிறார்.

இதற்குப் பிரதமர் தந்த பதில் என்ன தெரியுமா? "நாம் அவரைச் சந்தித்ததில்லை; அவரது தேவை என்ன என்பது பற்றி அறிய முடியாதிருக்கின்றது!"

தமிழர்கள் உரிமைகள் பற்றி, பாராளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்கள் பேசிய பேச்சுக்கள் பக்கம் பக்கமாக உள்ளன.

அரசியல் வாதிகளைவிட, பொது ஸ்தாபனங்கள் அரசாங்கத்திற்கு அனுப்பிய மகஜர்கள் மலைமலையாகக் குவிந்திருக்கும்!

உலக அரங்குகளில் இலங்கையின் இனப்பிரச்சினை பற்றியும் அதற்கான தீர்வுகள் பற்றியும் சாங்கோபாங்கமாக ஆராயப்பட்டு வருகின்றது.

அண்மையிற்கூட, விடுதலைப் புலிகளின் தலைவர் விடாப்பிடியாக நிற்கிறார் என்ற வீண் பழியைத் துடைத்து, பூரண சுயாட்சி அதிகாரமுள்ள சமஷ்டி யோசனை முன்வைக்கப்பட்டால் ஆராயத் தயார் எனப் பிரபலமான செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியிற் கூறப்பட்டது.

தமிழர் குறைகள் அரசுக்குத் தெரியும்; அதற்கான தீர்வை முன்வைக்க வேண்டியது அவர்கள் கடமை!

### மகளிர் இல்ல ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல பதினொராவது ஆண்டுவிழா எதிர்வரும் 4-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய அதிபர் திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் கலந்து கொள்கிறார். பரிசளிப்பு நிகழ்வும் இல்லப் பிள்ளைகளின் கலை நிகழ்வும் இடம் பெறும். (ரி)

# புலிகளின் நேச உணர்விற்கு கைதியின் தந்தை பாராட்டு

(நெல்லியடி)

"தமிழீழ விடுதலைப் புலிகளின் நேச உணர்வைப் பாராட்டுகிறோம்" என்று புலிகளின் பாதுகாப்பிலிருக்கும் தனது மகனைப் பார்வையிட்டபின் திரும்பிச் செல்கையில் போர்க்கைதி ஒருவரின் தந்தை ஒருவர் தெரிவித்தார்.

பருத்தித்துறை இறங்கு துறைக்கு குமணப்பலிச்செல்வதற்காக வந்திருந்த யுத்தக் கைதியின் தந்தையான காலியைச் சேர்ந்த ஜி. தர்மதாசா (வயது 48) என்பவரே இவ்வாறு கூறினார்.

தனக்கு மூன்று பெண்பிள்ளைகளும் ஒரு ஆண் மகனும் இருப்பதாகவும் தமது குடும்ப நிலைமையினால் தனது மகன் பொலிஸில் பணிபுரிய சேர்ந்தார் என்றும், அவர் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் கடமைபுரிந்த சமயம் விடுதலைப்புலிகளின் முற்றுகையில் யுத்தக் கைதியாக கைதுசெய்யப்பட்டார் என்றும் தெரிவித்தார்.

தர்மதாசா மேலும் கூறுகையில் தாம் இங்கு வந்த பொழுது விடுதலைப்புலிகளின் சேவை மனப்பான்மையையும் நேச உணர்வையும் காண முடிந்ததென்றும் அவர்கள் எந்த ... உரிமைகளுக்காகப் போராடி வருகிறார்களென்பதையும் இங்கு ... இறந்ததென்றும் இதுபற்றி அரசிடம் குறிப்பிடுவோம் என்றும் தெரிவித்தார்.

பிரிகேடியர் வீரசேகரா போன்ற சில உயரதிகாரிகள் வடபகுதிக்கு வந்து தமிழர்களின் குறைபாடுகளையும், உணவுத் தட்டுப்பாட்டையும் கவனிப்பார்களேயானால் விரைவில் தமிழ்மக்கள் நல்ல எதிர்காலத்தை ... யதாக இருக்குமென்றும் அவர் கூறினார். (160-ரி)

### மிருதங்க அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

சங்கீதரத்தினம் எம். சிதம்பரநாதனின் மாணவன் செல்வன் சரங்கேயன் ஆதவனது மிருதங்க அரங்கேற்றம் நாளை சனிக்கிழமை மாலை நான்கு மணிக்கு இணுவில் கலைஞர் மண்டப கலாமண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு யாழ். நுண்கலைப்பீடத் தலைவர் கா. சிவத்தம்பி பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். இசையரங்கில் பாட்டு எஸ் பத்மலிங்கம், வயலின் ஆர். இராதாகிருஷ்ணன், கடம் க. கண்ணதாசன், தம்புரா சண்முகலிங்கம் ஆகியோர் பங்குபற்றுவர். (எஸ்)

★ சவுதியில் அதிகரித்து வரும்

# பகிரங்க மரண தண்டனைகளுக்கு மன்னிப்புச்சபை கண்டனம்

(லண்டன்)

சவூதி அரேபியாவில் அதிகரித்து வரும் பகிரங்க மரண தண்டனை குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மாத்திரம் பொதுமக்கள் மத்தியில் பகிரங்கமாக 100 பேருக்கு மேல் தலை துண்டிக்கப்பட்டது போன்ற பல மரணதண்டனைகள் கடந்த ஆண்டுகளை விடப் பெருமளவு அதிகரித்துள்ளது.

சில குறிப்பிட்ட குற்றங்களுக்கு சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டு, பகிரங்கமாகக் குற்றவாளிகள் தலை துண்டிக்கப்படுகிறார்கள்.

மரணதண்டனை விதிக்கப்படுவதும் பகிரங்கமாக நிறைவேற்றுவதும் சவூதி அரேபியாவில் அண்மைக் காலமாக அதிகமாக அதிகரித்துக் காணப்படுவதாக கவலையுற்ற சர்வதேச மன்னிப்புச் சபை, குற்றச் செயல்களுக்கு மரண தண்டனை விதிக்கும் செயல்களைக் குறைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. (கே-சி)

# இலங்கை எதிர்க் கட்சிகள் அமெரிக்கா மீது கண்டனம்

(கொழும்பு)

ஈராக் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏவுகணை தாக்குதல் நடத்திய அமெரிக்காவை இலங்கை எதிர்க்கட்சிகள் கடுமையாக கண்டித்துள்ளன.

அப்பாவி பொதுமக்கள் இத்தாக்குதல்களினால் பலியாகியிருப்பது கவலைக்குரியதும் கண்டனத்துக்கு உரியதுமென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஈராக் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் குறித்து முஸ்லிம் நாடுகளிலும் ஆசிய நாடுகளிலும் பல எதிர்ப்பு உணர்வலைகள் தோன்றியுள்ளன (கே-சி)

ஜெர்மனிக்கு சட்டவிரோதமாக

# அகதிகளை கொண்டுசெல்லும் குழுக்கள் மீது நடவடிக்கை

(பொன்)

ஜெர்மனியில் நேற்று கொண்டுவரப்பட்ட புதிய சட்டத்தின்படி ஜெர்மனிக்குள் சட்டவிரோதமாக அகதிகளை கொண்டு வரும் குழுக்கள் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தற்போது ஜெர்மனிக்குள் நுழையும் அகதிகளினால் நாட்டில் அவசரகாலநிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

புதிய சட்டத்தின்படி அகதிகளை கடத்திவரும் குழுவினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இவர்கள் பணத்திற்காக ஹங்கேரி செக்கோஸ்லவாக்கியா மூலம் ஜெர்மனிக்குள் ஆட்களை கடத்தி வருகிறார்கள்.

போலி தஸ்தாவேஜுகளை தயாரித்தும் எல்லையில் வரும்போது காவலர்களுக்கு லஞ்சம் வழங்கியும் இவ் அகதிகள் மற்றும் தொழிலாளர்கள் ஜெர்மனிக்குள் நுழைகிறார்கள்.

இந்த வகையில் சீனா, வியட்நாம், இலங்கை மற்றும் ஆசிய ஆபிரிக்க நாடுகளிலிருந்து ஆட்கள் கடத்தப்படுகிறார்கள் என தெரிவிக்கப்பட்டது.

புதிய சட்டத்தின் பிரகாரம் ஆட்கடத்தும் குழுக்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கே-சி)

### இராசி பலன்

02-07-1993

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு ஆனி 18)

திரயோதசி காலை 6-57 வரை. கேட்டை முன் இரவு 8-47 வரை, இராகுகாலம் 10-26 முதல் 11-56 வரை, சுபநேரம் காலை 5-56 முதல் 7-56 வரை, மரணயோகம், பவித்திரா சதுர்த்தி.

மேஷம்: மனோவியாகூலம், புதுக்கவலை, பணமுடை.

இடபம்: தெய்வீக நினைவு, மனஅடக்கம், பணவரவு.

மிதுனம்: அதிகார பதவி, மனக்களிப்பு, தொழில் லாபம்.

கடகம்: கடும் சிந்தனை, குடும்ப கவலை, அலைச்சல்.

சிங்கம்: தொழில் பிரச்சினை, தடுமாற்றம், கடன்பகை.

கன்னி: குடும்ப சந்தோஷம் அதிக அறிவு, விருந்துண்ணல்.

துலாம்: மனக் குமுறல் வேண்டாத தொல்லை, வெறுப்பு.

விருச்சிகம்: மனத் தைரியம் அசம்பாவம், குடும்ப பிரிவு

தனுசு: பிறர் மகிழ்ச்சி, தனியான போக்கு, குழப்பம்.

மகரம்: பயண ஏற்பாடு, குடும்ப மகிழ்ச்சி, உறவினர் வருகை.

கும்பம்: பிறர் பாராட்டு, கருத்து உடன்பாடு, காரிய சித்தி.

மீனம்: குடும்ப சோதனை, உடல்நோய், நண்பர் குறை கேட்டல்.

— ஜோதிடர்.

### இன்று

2 மயக்கத் தொடர்கதை)

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய வருடாந்த ரதோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் நாளை தீர்த்தோற்சவம் நடைபெறும்

0 0 0

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும் வருடாந்த நாடக விழாவில் 2வது நாள் நிகழ்ச்சிகளாக இன்று திரிசங்கு சொர்க்கம், புதிய தோர் வீடு, சாலோம் பகுதி-II ஆகிய நாடகங்கள் இடம்பெற இருக்கின்றன. நிகழ்ச்சிகள் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும். (ம)

0 0 0

(அரியாலை)

அரியாலை பகுதியிலுள்ள பிரசித்திபெற்ற யாத்திரை ஸ்தலமாக விளங்கும் மடுத்திருப்பதியில் மடுமாதா திருவிழா இன்று 2-ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். (59)

0 0 0

(நெல்லியடி)

பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று 2-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடைபெறவுள்ளது. (160)

## 2ம் தவணைப் பரீட்சை 15ம் திகதி ஆரம்பம்

(திருநெல்வேலி) பாடசாலைகளின் இரண்டாம் தவணைப் பரீட்சைகள் எதிர்வரும் 15-ந் திகதி முதல் 23-ந் திகதி வரை நடைபெற உள்ளன.

இம்மாதம் 28-ந் திகதி பாடசாலைகள் இரண்டாம் தவணை விடுமுறைக்காக மூடப்படவுள்ளதாகவும் எதிர்வரும் 29-ந் திகதி க. பொ. த உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. —157

## நுளம்பு மூலம் காய்ச்சல் யாழ். மாவட்டத்தில் பரவுகிறது

(யாழ்ப்பாணம்) யாழ் மாவட்டத்தில் நுளம்புகளின் மூலம் ஒருவகைக் காய்ச்சல் மிக வேகமாகப் பரவி வருவதாக யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நுளம்பில் உள்ள ஒருவகை வைரஸ் மூலமே இக்காய்ச்சல் பரவுவதாகத் தெரிவித்த அவர் நுளம்பு உற்பத்தியாகாமல் சூழலைப் பாதுகாப்பதன் மூலம் இவ்வகைக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த முடியும் என்று அவர் பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார். (ஈ)

**தரம் குறைந்த**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வித பிரயோசனமும் ஏற்படவில்லையென்று இப்பகுதிவாழ் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ஈ)

**அரசியல் தஞ்சம்**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ணிக்கை பெருமளவில் குறைவாமென்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. —வி

**ஜனாதிபதி**
(1ம் பக்கத் தொடர்ச்சி)
தில் இந்த சந்திப்பும் பேச்சுவார்த்தையும் நடைபெற்றது.

நாட்டின் முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆயர் கென்னத் பெர்னாண்டோவுடன் ஜனாதிபதி விஜேதுங்க பேசியதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் விஜயம் செய்து விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின் ஆயர் கென்னத் பெர்னாண்டோ ஜனாதிபதி விஜேதுங்காவை சந்தித்தது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரேமதாசா ஜனாதிபதி பதவியில் இருந்தபோது ஆயர் கென்னத் பெர்னாண்டோ யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தும் ஆனால் தமது விஜயம்பற்றி ஜனாதிபதி பிரேமதாசாவிடம் தெரிவிக்க அவருக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்காததும் தெரிந்ததே.

எனவே ஜனாதிபதி விஜேதுங்காவுடனான இந்தச் சந்திப்பு முக்கியம் வாய்ந்த ஒன்றென அரசியல் அவதானிகள் கருத்துத்தெரிவித்தனர். (இ)

## வானொலி தொலைக்காட்சி தொடர்புகள் குறைந்தன - அமைச்சர் ரணசிங்க

(கொழும்பு) முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலைக்குப் பின்பு வானொலி தொலைக்காட்சி சேவைகளில் உள்ள தொடர்புகள் தம்மிடம் குறைந்துள்ளதாக தலைமைத்துறை ராஜாங்க அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்க தெரிவித்ததாக ஏ. எவ். பி. செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் இறைச்சிப் பொருட்கள் பற்றிய விளம்பரங்களை தொலைக்காட்சியில் காட்டக்கூடாது என பௌத்த பிக்குகள் வலியுறுத்தியதை அடுத்து தொலைக்காட்சியில் இவ்வகையான விளம்பரங்கள் ஒளிபரப்பப்படமாட்டாதென ரூபவாஹினி அறிவித்ததை அமைச்சர் குறை கூறியுள்ளார். —கே

## பாடசாலை மாணவர்க்கு புலமைப் பரிசில்

(கொழும்பு) மக்கள் வங்கி தனது 32-வது வருட பூர்த்தியை கொண்டாடும் முகமாக பாடசாலை மாணவர்களுக்கு இரு வருடங்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கத் திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு நடைபெற்ற க. பொ. த. சாதாரணதர பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவ மாணவிகளுக்கு இரு வருடங்களுக்கு மாதாந்தம் தலா ஆயிரம் ரூபாவீதம் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. முதல்கட்டமாக 32 மாணவர்கள் இந்தப் புலமைப் பரிசிலைப்பெற தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (வி)

## தமிழகத்தில் புலிகளின் ஊடுருவல் பற்றி உள்துறை அமைச்சர் விளக்கம்

(புதுடில்லி) விடுதலைப் புலிப் போராளிகளும் ஆதரவாளர்களும் தமிழக அரசில் ஊடுருவி விட்டனர் என்று உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியதாக வெளிவந்த செய்தியை மத்திய உள்துறை அமைச்சு முற்றாக மறுத்துள்ளது.

இது தொடர்பாக இந்த அமைச்சு தெரிவிக்கையில்: விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதில் மத்திய அரசும் தமிழக அரசும் ஓரளவு வெற்றி பெற்றுள்ளபோதிலும் தமிழக பொலிசாரின் காவலிலிருந்து விடுதலைப் புலிகளின் விசாரணைக் கைதிகள் அண்மையில் வெளியேறிய சம்பவம் தமிழகத்தில் விடுதலைப்புலிகள் ஊடுருவிவிட்டனர் என்பதையே காட்டுகின்றது என்பதை மட்டுமே திரு. எஸ். பி. சவான் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் தமிழகத்தில் ஊடுருவிட்டனர் என்பதற்கும் தமிழக அரசில் ஊடுருவி விட்டனர் என்பதற்கும் இடையே வித்தியாசம் உண்டு என்றும் பத்திரிகைகள் தவறான அர்த்தத்தில் செய்திகளை வெளியிடுகின்றன எனவும் உள்துறை அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஊ)

## அமெரிக்க தளம் மீது ஜப்பான் தீவிரவாதிகள் தாக்குதல்

(டோக்கியோ) ஜப்பானில் அமைந்துள்ள அமெரிக்காவின் விமானப் படைத்தளத்தின் மீது ரொக்கெட் தாக்குதல்கள் நேற்று நடத்தப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜப்பானின் தலைநகரான டோக்கியோவுக்கு அருகில் அமைந்துள்ள அமெரிக்க விமானப்படைத் தளத்தின் மீது ஜப்பானில் தயாரிக்கப்பட்ட ரொக்கெட்டுகள் மூலம் தொடர்ச்சியான தாக்குதல்களை ஜப்பான் தீவிரவாதிகள் நேற்று நடாத்தினார்கள்.

மேற்படி தாக்குதலில் உயிர்ச்சேதம் ஏற்படாவிட்டாலும், விமானத்தளத்தில் தரித்து நின்ற சில போர் விமானங்களுக்கு சிறுசேதம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

அடுத்தவாரம் டோக்கியோவில் நடைபெறவிருக்கும் தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளின் மகாநாட்டுக்கு (ஜி 7) எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இடதுசாரி தீவிரவாதிகள் இத்தாக்குதலை நடாத்தியிருக்கலாம் என ஜப்பான் நாட்டு பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி)

**வவுனியா**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
உத்தரவிட்டுள்ளது.

மேற்படி பகுதிகளை சுற்றி முட்கம்பி வேலிகளை அமைக்கும் வேலைகளை இராணுவத்தினர் தற்போது ஆரம்பித்துள்ளதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**இந்திய**
(1ம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கை விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகவும் இலங்கைக்கு இந்திய அரசியல் நிலவரம் மற்றும் பொருளாதார உறவுகள் குறித்து பேசவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய அரசுத் தலைவர்களுடன் புதுடில்லியில் அண்மையில் நடாத்திய பேச்சுவார்த்தையை பின்பற்றி பேச்சுவார்த்தைகள் இடம் பெறும் என்றும் தெரியவருகிறது. (க)

**தமிழகத்**
(1ம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைத் தமிழ் அகதிகளை அவர்களின் சொந்த நாட்டுக்கு அழைத்துச்செல்ல இரு கப்பல்கள் மத்திய அரசின் ஒப்புதலுடன் வழங்கப்படும் என ஐ. நாவின் அகதிகள் ஆணையாளர் திரு. பாறி என்னிடம் உறுதியளித்துள்ளார்.

முதலாவது கப்பல் 450 அகதிகளுடன் சென்னையில் இருந்து திருமலைக்கும் இரண்டாவது கப்பல் சுமார் 100 அகதிகளுடன் இராமேஸ்வரத்திலிருந்து திருமலைக்கும் புறப்படும் என்றார்.

தற்போது தமிழகத்தில் உள்ள 80 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளில் 7 ஆயிரம் பேர் இலங்கைக்கு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இந்த அகதிகள் மீது தமிழக அரசு சமீபகாலமாக மேற்கொண்டு வரும் அழுத்தம் காரணமாகவே இவர்கள் தாயகம் திரும்பும் முடிவுக்கு வந்திருக்கலாம் என்றும் தெரியவருகிறது. —க

## 90 இராணுவ முகாம்களை மூடிவிட அமெரிக்கா முடிவு

(நியூயோர்க்) வெளிநாடுகளில் உள்ள முக்கிய இராணுவத் தளங்களில் 90 முகாம்களை மூடிவிடுவதற்கு ஜனாதிபதி பில் கிளிண்டன் திட்டமிட்டுள்ளதாக வெள்ளை மாளிகை அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

இந்த முகாம்கள் மூடப்படுவதால் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் வேலை இழக்கும் நிலை ஏற்படுமென்றும், இவர்களுக்கு புதிய வேலைகள் வழங்குவதற்கு அரசு திட்டம் தீட்டியுள்ளதாகவும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது.

இதேநேரம் அமெரிக்கா மீண்டும் வடவியட்நாமுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கு முன்வந்துவருவதாகவும் வியட்நாமுக்கு சர்வதேச வங்கிக் கடன் வழங்குவதற்கும் அமெரிக்கா அரசு திட்டமிட்டுள்ளதுடன், அமெரிக்க வியட்நாம் யுத்தத்தில் காணமற்போன இரண்டாயிரம் அமெரிக்கப்படை வீரர்களின் விபரங்களையும், அமெரிக்கா, வியட்நாமிடம் கேட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. —வி

**இராணுவ**
(1ம் பக்கத் தொடர்ச்சி)
ணல் சரத் பொன்சேகா நியமிக்கப்படுவார்.

கொத்தலாவல இராணுவப் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பதிகாரியான கேர்ணல் ஜெயக்கொடி அம்பாறை மாவட்ட தளபதியாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இரு இராணுவ மேஜர் ஜெனரல்கள் தங்கள் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளதால் இம்மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் 7 மேஜர்களை லெப். ஜெனரல்களாகவும், 4 அதிகாரிகள் கேர்ணல்களாகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளதாகவும் கூட்டுப்படை தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. —உ

**கோதீவு இறங்கு**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பார்வையிட்டனர்.

இந்த அதிகாரிகளுடன் அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலய யாழ். வதிவிடப் பிரதிநிதி அசோக்குமாரும் கோதீவு சென்றிருந்தார்.

இப்பகுதியின் முன்பு பாவனையிலிருந்த பொருட்களை ஏற்றி இறக்கும் இரு பாஜ்கள் மற்றும் கட்டிடங்கள் யாவும் தரைமட்டமாகியிருந்ததை இவர்கள் கண்டனர்.

இந்த அதிகாரிகள் இன்று நண்பகல் 12.30 மணியளவில் பருத்தித்துறை ஊடாக கப்பல் மூலம் கொழும்பு திரும்பவுள்ளனர். (157 க)

## நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்) யாழ் இலக்கிய வட்டத்தின் மூத்த உறுப்பினர் புலவர் வே. கனகசபாபதியின் நினைவஞ்சலிக்கூட்டம் நாளை மூன்றாம் திகதி மாலை மூன்று மணிக்கு கொக்குவிலிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் த. வைத்திலிங்கம் தலைமை தாங்குவார். நினைவஞ்சலி உரைகளை அனு. வை நாகராஜன், டொமினிக்ஜீவா, எஸ். சாம்பசிவம். ஐயா சச்சிதானந்தன் ஆகியோர் நிகழ்த்துவார்கள். (எஸ்)

## ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய "கரும்புலிகள்" பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீடும், கலைஞர்களைக் கௌரவித்தல் நிகழ்வும் இடம்பெறும். 'கரும்புலிகள்' பாடல் ஒலிப்பதிவு நாடாவின் மதிப்புரைகளும் இடம்பெறும்.

**அத்தியாவசியப்**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வும் மேலும் 3,700 மெற்றிக்தொன் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடுத்த மாதம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். —க

**புதிய முகாம்**
(3-ம் பக்கத் தொடர்ச்சி)
சித்தாண்டி நடராசானந்தா சங்கத்தின் அனுசரணையுடன் வந்தாறுமூலை பல்கலைக்கழகத்திற்கண்மையிலுள்ள பிரதான வீதியில் தனியார் இல்லமொன்றில் இது திறந்து வைக்கப்பட்டுள்ளது. (71-இ)

## விதை உருளைக்கிழங்கு

(யாழ்ப்பாணம்) 1993 ஆம் ஆண்டுக்கான உருளைக்கிழங்கு செய்கைக்கு முன்பு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு இங்கு விநியோகிக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கு 100 மெ. தொன் இம்முறை இங்கு அனுப்பி வைக்கப்படுமென விவசாயத் திணைக்கள செயலாளர் யாழ். அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார். (162)

## சிரித்திரன் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்) சிரித்திரன் ஆனி மாத இதழ் வெளிவந்துள்ளது. இவ்விதழில் முன்முறுவல், நிலைக்கண்ணாடி, மகுடி பதில்கள், பின் சிரிப்பு, ஜுலுமணி, சிரித்திரன் அகராதி, இக்கட போட்டி ஆகிய வழமையான அம்சங்களுடன் புதிய சுவையான விடயங்களும் இடம் பெற்றுள்ளன.

மேலும் சிறுகதைப் போட்டி முடிவு, ஒரு வைத்தியரின் தினக் குறிப்பேட்டிலிருந்து இறுதிப் பகுதி, கவர் கவிதை திக்வயல் சி. தர்மகுலசிங்கம் எழுதிய 'சிப்புச்சரம்' கட்டுரை போன்றவையும் வெளிவந்துள்ளன.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 02-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B